# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Multidisilinary Journal )

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :24 October 2024*

கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**



**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி**
அ.சகாய ஜெசிகலா

**பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்**
ச.பாப்பாசெல்வம்

**சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்**
முனைவர். அ. அமுல்ராஜ்

**Exploring the Dynamics of Tourism Planning**
S.John Abraham

**Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum**
Gayathry. D

**Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies**
P.M.Shiyana.

**மக்கள் பாடகர்களின் சமூக நிலை**
வ.விக்டர்

**இசையும் சமூக விமர்சனமும்**
வ.விக்டர்

**Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education**
V. Vijay Arun

**Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music**
V. Vijay Arun

**மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்**
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# தொல்லியல்



# இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி

# *The Scope and development of Iduthulai formation*

அ. சகாய ஜெசி கலா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை,

சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

*A.Sahaya Jessy Kala,*
*Ph.D Scholar,*
*Department of Tamil Literature,*
*University of Madras,*
*Chennai-600 005.*

**ஆய்வுச் சுருக்கம்**

புதிய கற்காலத்தில் இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கத்தினை ஆரம்பித்த தொல் மனிதன் பெருங்கற்காலத்தில் அவர்களை வணங்கும் வழக்கத்தினைக் கொண்டு வந்தான். இறந்த ஆன்மா கல்லில் உறையும் என்ற நம்பிக்கையில் பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை உருவாக்கி பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் சடங்குமுறைகளைத் தோற்றுவித்து வழிபடவும் தொடங்கினான் என்பதை பல மானிடவியல் மற்றும் தொல்லியல் ஆய்வாளர்களின் ஆய்வறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய ஈமச்சின்னங்களான கல்பதுக்கை, கல்திட்டை போன்றவற்றில் இடுதுளை எனப்படும் சிறிய துவாரம் காணப்படுகிறது. இது ஆரம்பத்தில் இரண்டாம் முறை அடக்கம் செய்யப்பட்ட எஞ்சிய எலும்புகளை துளையின் வழியாக இடுவதற்கும், அடுத்து வழிபாட்டு நிலைக்கு வளர்ச்சி அடைந்த பின்பு படையல் பொருட்கள் இடுவதற்கும், பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை அகழாய்வு தரவுகள் வெளிப்படுத்துகின்றன. இன்றும் இவ் இடுதுளை இடும் பழக்கம் சில இடங்களில் மறைமுகமாக இருந்து வருகிறது.

**திறவுச்சொற்கள்**

இடுதுளை, இரண்டாம் முறை அடக்கம், பெருங்கற்காலம், கற்பதுக்கை, கல்திட்டை

***Abstract:***

*This study delves into the evolution of burial practices and ancestor veneration among early humans, with a particular focus on the megalithic period. Numerous anthropological and archaeological studies corroborate the hypothesis that the practice of burying the dead, which began in the Neolithic era, subsequently led to the development of ancestor worship during the Megalithic period. The belief in the soul residing within stones prompted the construction of megaliths as funerary monuments, giving rise to a variety of beliefs and rituals. A common feature found in these megalithic structures, such as dolmens and cists, is a small hole known*

*as an 'idudulai'. Initially used to insert the residual bones from secondary burials, this hole evolved over time into a focal point for worship. Although the practice of creating these holes has become less overt in many cultures, it continues to persist in some regions.*

***Significance of the study:***

- *The transition from Neolithic burial practices to megalithic ancestor worship.*
- *The significance of megaliths as funerary monuments and places of worship.*
- *The evolution of the 'idudulai' from a practical function to a symbolic one.*
- *The persistence of ancient burial customs in contemporary societies.*

***Key Words:***

*Idudulai, Secondary Burial, Megaliths, Dolmens and Cists.*

**முன்னுரை:**

புதிய கற்காலத்தில் இறந்தவர்களை தங்கள் வாழ்விடங்களிலே புதைக்க ஆரம்பித்த மக்கள் அதற்கு அடுத்த காலக்கட்டமான பெருங்கற்காலத்தில் தங்கள் வாழ்விடப் பகுதிக்கு சற்று தொலைவில் புதைக்க ஆரம்பித்தனர். இதற்கு சான்றாக அகழாய்வில் கிடைக்கும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அனைத்தும் வாழ்விடப் பகுதிக்கு சற்று தள்ளியுள்ள மேடான பகுதிகளில் கிடைக்கின்றன. இதனால் இறந்த உடல்களைத் தனியாக புதைக்கும் ஒரு நாகரீக பண்பாடாக பெருங்கற்காலம் விளங்கி இருந்ததை அறிய முடிகிறது. இத்தகைய மக்கள் ஆன்மாவானது கல்லில் உறையும் என்ற நம்பிக்கையில் பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை உருவாக்கினர். ஆவியை நிலைநிறுத்தி வைக்கும் இடமாகக் கல் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதற்கு ரோமானிய வரலாற்று ஆய்வாளர் மிர்சியா எலியட் **புரதான மனிதர்களின் சமய உணர்வானது கடினத்தன்மை, முரட்டு தன்மை, நிலைத்தன்மை என்ற மூன்றும் இணைந்ததாகும். கம்பீரமான தோற்றமுடைய ஒரு பாறை அல்லது கருங்கல்லை விட உயரமானதும் மரியாதையைத் தூண்டுவதுமான வலிமை பெற்ற எதுவும் அச்சமுகத்தில் அன்று இல்லை என்று கூறியுள்ளார். (பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும், ஆ.சிவசுப்பிரமணியன், ப- 24)** இந்த கருத்தின் மூலம் நிலையில்லாமல் சுற்றி திரியும் ஆவியை ஓரிடத்தில் நிலைநிறுத்த வலுவானக் கற்களே சிறந்தது என்பதை பெருங்கற்கால மனிதர்கள் அறிந்திருந்தனர். இதனால் ஆன்மா தன் இனத்தோடு இருக்கும் எனவும், மேலும் தன் இனம் விருத்தி அடையும் எனவும் பல்வேறு சடங்குகளைச் செய்துள்ளனர். அவர்களின் பல்வேறு நம்பிக்கைகளில் ஒன்றான மிகப்பெரிய கற்களால் ஏற்படுத்தப்பட்ட பதுக்கையில் ஒரு இடத்தில் மட்டும் சிறிய அல்லது பெரிய அளவிலான துவாரம் போன்று துளையிட்டு வைத்துள்ளனர். இதனை ஆய்வாளர்கள் இடுதுளை எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். இந்த இடுதுளை உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பது பற்றியும், இடுதுளை இடும் வழக்கத்தின் வளர்ச்சி நிலை குறித்தும், தற்காலத்திலும் இடுதுளை இடும் வழக்கம் உள்ளனவா? என்பதைப் பற்றியும் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**ஆய்வாளரின் கருத்துக்கள்**

பல சிறப்புகளைக் கொண்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் காணப்படும் இடுதுளை என்ற அமைப்பின் காரணம் குறித்து பல ஆய்வாளர்கள் விளக்கம் தெரிவித்துள்ளனர். அவற்றைக் குறித்து பின்வருமாறு காணலாம்.

**சேசாதிரி**

மைசூர் பல்கலைக்கழகத்தில் வரலாறு மற்றும் தொல்லியல் துறையின் பேராசிரியராக பணியாற்றியவரான இவர் இடுதுளை பற்றிய கருத்தினை கூறும்போது இறந்தவர்களின் ஆவி தங்குகின்ற அல்லது உறையும் இடமாகக் கல்லறை அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த ஆவி உள்ளே சென்று வருவதற்கு இந்த இடுதுளை வைக்கப்பட்டுள்ளது என்றும் இதன் வழியாகப் படையல் பொருட்களை வைத்தனர் என்பதும் தவறானது. ஆவி அல்லது ஆன்மா உறையும் இடம் என்பதால் படையல் பொருட்களாகத் தண்ணீர், மணிகள், மட்கலங்கள், இரும்பு ஆயுதங்கள் போன்றன வைக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார். (**தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு,** தி.சுப்பிரமணியன், ப-130)

**வால் ஹவுஸ்**

எகிப்தில் உள்ள இத்தகைய சின்னங்களில் இடுதுளையைப் போன்ற துவாரம் உள்ளது என்றும் இவை பிற்காலத்தில் பாதுகாக்கப்பட்ட உடலுக்கு மூலிகைப் புகையை உள்ளே ஊதுவதற்காக வைக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றார். (**தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு**, தி.சுப்பிரமணியன், ப-130) ஆனால் தென்னிந்திய பெருங்கற்காலச் சின்னங்களுக்கு இது ஏற்புடையதாக இல்லை.

**மார்டிமர் வீலர்**

பிரிட்டிஷ் தொல்லியல் ஆய்வாளரான வீலர் அவர்கள் இடுதுளைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார். கர்நாடகாவிலுள்ள பிரம்மகிரியை அகழாய்வு செய்தபோது அங்கிருந்த கல்லறைகளில் இடுதுளைப் பெரிய அளவிலும், மனிதர் உள்ளே சென்று வரும் அளவிலும் காணப்பட்டன. இதனால் படையல் பொருட்களைக் கல்லறையின் உட்பகுதியில் வைக்க இது பயன்பட்டது என்று கருதுகின்றார். (**தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு,** தி.சுப்பிரமணியன், ப-130)

**தி. சுப்பிரமணியன்**

இடுதுளை என்பது ஆவி உறையும் இடமான கல்லறைக்குச் சென்று வருவதற்கு உதவியாக அமைக்கப்பட்டது என்கிறார். (**தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு**, தி.சுப்பிரமணியன், ப-131)

**கோ.சசிகலா**

இறந்தவரின் ஆவி அல்லது உயிர் மீண்டும் பிறக்கும் என்ற நம்பிக்கையில் ஏற்படுத்தப்பட்ட இடுதுளைகள் பெண்ணின் பிறப்புறுப்பிற்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளன என்று வேறுவிதமான கோணத்தில் இவர் குறிப்பிட்டுள்ளார். (**தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம், கோ.சசிகலா, ப-90**) இவ்வாறு இடுதுளைக் குறித்து கூறப்பட்டுள்ள பல்வேறு அறிஞர்கள் ஆன்மா வெளியேறுவதற்காக இவை

ஏற்படுத்தப்பட்டது என்று கூறும் நிலையில் வீலர் அவர்கள் மட்டும் படையல் பொருட்களை வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட துளை என குறிப்பிட்டுள்ளார். சேசாதிரி அவர்கள் படையல் பொருட்கள் வைக்கும் வழி என்று கூறினாலும் ஆன்மாவோடு இணைத்தே கூறியுள்ளார். இவ்வாறு, இடுதுளை தோற்றத்திற்கான உண்மைத்தன்மையை ஆராயும் முன்பு இடுதுளை என்ற சொல்லிற்கான பொருளை முதலில் ஆராய வேண்டி உள்ளது.

**இடுதுளை**

இடுதுளை என்ற சொல்லை விளக்கும் போது **இடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட துளை** என்ற பொருளானது கிடைக்கின்றன. ஆனால் மேற்கண்ட முறையில் தொல்லியல் ஆய்வாளர்கள் இந்த இடுதுளை ஆன்மா அல்லது ஆவி சென்றுவருவதற்காக ஏற்படுத்தப்பட்டவை என்று கூறும் கருத்துகள் முரண்பாடாக உள்ளன. ஆகையால் இடுதுளை என்ற அமைப்பு எதையேனும் இடுவதற்காக ஏற்படுத்தப்பட்டதா அல்லது ஆய்வறிஞர் கூறுவது போல் ஆன்மா சென்று வருவதற்காக ஏற்படுத்தப்பட்டதா என்பதை ஆராய்வது அவசியமாகிறது. அதற்குமுன் பெருங்கற்கால மக்கள் அடக்கம் செய்த முறையினை தொல்லியல் சான்றுகளோடு அறிந்து கொள்வதின் மூலம் இடுதுளை உருவாக்கத்தின் காரணத்தை நாம் அறிந்துகொள்ள முடியும்.

**இரண்டாவது அடக்கம்முறை (Secondary Burials)**

தென்னிந்தியாவில் கிடைக்கின்ற பெரும்பாலான ஈமச்சின்னங்கள் இரண்டாவது முறை அடக்கம் செய்யப்பட்டவை. இதனை பல அகழாய்வு சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இதற்கான விளக்கத்தினை மைசூர் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வறிஞர் H.S. ரமணா அவர்களின் கூற்றின் மூலம் அறியலாம்[1]. **தென்னிந்திய பெருங்கற்காலச் சின்னங்களில் இறந்த உடலினை சிறிது நாட்கள் வெளியிலிட்டு பறவை மற்றும் விலங்குகளால் உண்ணப்பட்டு மிஞ்சிய எலும்புகளை மட்டுமே வைத்துள்ளனர் என குறிப்பிடுகிறார்.** இதுவே இரண்டாவது அடக்கம்முறை எனப்படுகிறது. தொல்லியல் ஆய்வாளர் தி.சுப்பிரமணியன் அவர்கள் தரும் விளக்கம் இக்கருத்தை மேலும் தெளிவுபடுத்துகின்றது. **இறந்தவர்களின் உடலை வெளியில் விட்டுவிட்டு பின்னர் பல நாட்கள் கழித்து எலும்பைச் சேகரித்து ஈமச்சின்னத்தில் வைத்து புதைத்துள்ளனர். இத்தகைய செயலால் ஈமச்சின்னம் பல நாட்கள் அல்லது மாதங்கள் கழித்து உருவாக்கப்பட்டுள்ளன (தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு, தி.சுப்பிரமணியன், ப-141 )**எனக் கூறுவதன் மூலம் அறியலாம்.

**இடுதுளையின் தோற்றம்**

பெருங்கற்கால மக்கள் இனக்குழு வாழ்க்கை முறையில் வாழ்ந்தவர்கள் என்பது பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்கள் எழுப்பியுள்ள முறையிலேயே அறிந்துகொள்ள முடிகிறது. அகழாய்வில் கிடைத்த ஈமச்சின்னங்களிலும் ஒரே சின்னத்தில் பல உடல்களின் எலும்புகள் கிடைக்கின்றன. எனவே ஒரு ஈமச்சின்னம் ஒருவருக்கானது அல்ல. அது ஒரு குழுவிற்கானதோ அல்லது ஒரு குடும்பத்திற்கானதோ இருந்திருக்கலாம். கற்பதுக்கை அளவில் மிகப்பெரியதாக உள்ளதால் இதனை ஏற்படுத்த பெரும் முயற்சி மற்றும் அதிக வேலைப்பாடுகள் தேவைப்பட்டிருக்கும். பல மக்களின் கூட்டு முயற்சியினால்

இச்சின்னங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மேலும், பெரிய கல்லில் ஒரு இடத்தில் மட்டும் துளை இடுதல் என்பது அன்றைய தொழில்நுட்ப கருவிகள் இல்லாத காலத்தில் மிகவும் கடினத்தன்மை வாய்ந்த செயல். இத்தனை உழைப்பு மிகுந்த இடுதுளை என்ற அமைப்பு வெறும் ஆன்மா சென்று வரும் வழி என்ற கருத்தில் அடக்குவது முறையாக இருக்காது. பிற்காலத்தில்தான் இடுதுளை அமைப்பு வழிபாட்டு முறைக்கு மாறியதே தவிர அதனுடைய தோற்றம் இரண்டாம் முறை அடக்கம் செய்யப்பட்ட மிஞ்சிய உடலின் எழும்புகளை உள்ளே இடுவதற்காக ஏற்படுத்தி இருக்கலாம். உருவாக்கப்பட்ட மிகப்பெரிய பதுக்கைகளை மீண்டும் நகர்த்தி வேறொரு இறந்த உடலினை வைத்து மீண்டும் அப்பதுக்கையினை மூடுதல் என்பது அன்றைய சமுதாயத்தில் எளிதான செயல் இல்லை. தன் குடும்பத்திலோ அல்லது குழுவிலோ இறந்தவரின் உடலை அடக்கம் செய்ய அந்த துளையே போதுமானது. ஏனெனில் ஏற்கனவே கூறியதன்படி முழு உடலை அவர்கள் அடக்கம் செய்யவில்லை. இறந்த உடலை வெளியிலிட்டு எஞ்சிய எலும்பினை மட்டுமே அத்துளையின் வழியாக வைத்துள்ளனர். **ஒரு பதுக்கைக்குள் பல உடல்களின் எலும்புகள் கிடைக்கின்றன[2].** இதில் பெரும்பாலும் **மண்டை ஓடுகள், நீண்ட எலும்புகள், விலா எலும்புகள் மற்றும் கீழ்த்தாடைகள் ஆகியவற்றையே தேர்ந்தெடுத்து வைத்துள்ளனர்[3].** பெரும்பாலான இடுதுளைகள் பதுக்கைக்கு கீழ் பகுதியிலேயே அமைந்துள்ளதால் எலும்புகளை இடுவதற்கும் பிற்காலத்தில் படையல் பொருட்கள் வைப்பதற்கும் இவை பயனுள்ளதாக இருந்துள்ளது. மேலும், அவர்களுக்கு பிடித்தமான மற்றும் பயன்படுத்திய பொருட்களை வைத்து வழிபாடு செய்வதற்கும் இத்துளையினை பயன்படுத்தி இருக்கிறார்கள்.

**இடுதுளையின் வளர்ச்சிநிலை**

பதுக்கைகளில் உள்ள இடுதுளையின் வளர்ச்சி நிலையினை 5 கட்டங்களாக தி. சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அவை,

1. இடுதுளைக்கு பதிலாக வாயில் போல பதுக்கையின் ஒரு பகுதி திறந்துவிப்பட்ட நிலை.
2. கல்லறையின் எதாவது ஒரு திசையில் மேல்பகுதி உடைக்கப்பட்டு துவாரம் போன்ற அமைப்பினை உருவாக்கிய நிலை.
3. கல்லறையின் கிழக்குப் பகுதியில் முறையான வடிவம் இன்றி U வடிவ இடுதுளை.
4. அடுத்த வளர்ச்சி வட்ட வடிவ இடுதுளை. இந்நிலை பெருங்கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சி நிலை என அழைக்கப்படுகிறது.
5. பதுக்கை இரட்டைக் கல்லறையாக வளர்ச்சி அடைந்தப் பின்பு இரண்டு இடுதுளை இடும் நிலை.

**தற்போதைய நிலை**

தற்போதைய அடக்கம் செய்யும் முறைகளில் முழு உடலை புதைத்தல் மற்றும் சுடுதல் என்ற இரண்டு முறைகள் காணப்படுகிறது. இவை ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு சமூக அமைப்பிற்கும் என பல சடங்கு முறைகள் வேறுபடுகின்றன. இதில் இடுதுளை என்னும் வழக்கம் வெளிப்படையாக இல்லையென்றாலும் சில பகுதிகளில் இவ்வழக்கம் மறைமுகமாக இன்றும் உள்ளது. தற்போது சுடுகாடு என்றழைக்கப்படும் இறந்தோரை அடக்கம் செய்யும் இடமானது குறிப்பிட்ட அளவு மட்டுமே

ஒவ்வொரு சமூகத்தைச் சார்ந்த பிரிவினருக்கு என தனியாக ஒதுக்கப்படுகின்றன. அந்த இடத்திற்குள் மட்டுமே அச்சமூக மக்களின் தலைமுறைகள் புதைக்கப்பட வேண்டிய சூழலில் ஒரு குடும்பத்திற்கு ஒரு கல்லறை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. அந்த குடும்பத்தைச் சார்ந்தவர்களை ஒரே கல்லறையில் புதைக்க இந்த இடுதுளை அமைப்பு இன்றும் சில இடங்களில் வழக்கத்தில் உள்ளது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் இறந்த பின்பு அவரின் நினைவாக அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் செங்கல் கொண்டு கட்டடம் எழுப்பப்பட்டு கோயில் போன்ற வழிபாடுகள் நடைபெறுகின்றன. அந்த கட்டடத்தின் முன் பகுதியில் உள்ள மண்ணை சற்று தோண்டி விளக்கி பார்த்தல் சிறிய துவாரம் ஒன்று தென்படுகிறது. அக்குடும்பத்தில் யாரேனும் இறந்தால் மீண்டும் கல்லறையின் கட்டட அமைப்பை சிதைக்காமல் அதில் உள்ள துவாரத்தை மட்டும் தோண்டி சவப்பெட்டியில் உள்ள இறந்த உடலை அதன் வழியாக உட்செலுத்தி மீண்டும் அத்துவாரத்தை விலங்குகள் சேதமடைய செய்யாத வண்ணம் நன்கு மண் கொண்டு மூடி வைக்கும் முறை அப்படியே பெருங்கற்கால மக்கள் பின்பற்றிய இடுதுளை என்ற அமைப்புடன் ஒத்துப் போகின்றன. எனவே பெருங்கற்காலத்தில் தோன்றிய கல்லறை அமைப்பு முறையில் இடுதுளை என்ற அமைப்பு இன்றும் சில இடங்களில் மறைமுகமாக வழக்கத்தில் உள்ளன. இவ்வாறாக இடுதுளை என்ற அமைப்பின் தோற்றம் ஆன்மா அல்லது ஆவி சென்றுவரும் பாதை என்பதற்கானது அல்ல. பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் இரண்டாம் அடக்கமுறை செய்யப்பட்ட இறந்த உடல்களின் எஞ்சிய எலும்பினை உள்ளே இடுவதற்காகவும், பின்பு படையல் பொருட்கள் வைத்து வழிபாடு செய்து வளர்ச்சி அடைந்ததையும், தற்போது இடுதுளை பண்பாடு என்பது பல இடங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதையும் இக்கட்டுரை விளக்கியுள்ளது.

**இடுதுளையுடன் கூடிய பதுக்கை கிடைக்கும் சில இடங்கள்**

- ஈரோடு மாவட்டம் கொடுமணல் [4]
- சேலம் மாவட்டம் மேட்டூர்
- திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை
- கிருஷ்ணகிரி மாவட்டம் மல்லசந்திரம்
- தருமபுரி மாவட்டம் போடுமலை (அரூர் வட்டம்)
- நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ( வாசலூரர்பட்டி)[5]
- திருவண்ணாமலை மாவட்டம் மலைக்கொல்லை[6]


**அடிக்குறிப்பு**

1. *After death the body was left Exposed for a considerable length of time and subsequently the available bones, salvaged from the feast of beasts and birds, were interred, without reference to their normal articulation, along with grave goods in the megalithic tombs. (H S.Ramanna, Pg:5)*

2. *There are also graves with multiple burials, sometimes upto sixteen people in one graves, as reported by meadows Taylor from Gulbarga region in Karnataka (H S.Ramanna, Pg:5)*
3. *Usually skulls, a selection of long bones, ribs and mandibles formed the bulk of the collection. The method of Interment involved here is termed Post-excarnation burials. (H S.Ramanna, Pg:5)*
4. முக்கோண அமைப்பிலான (Trapeze) இடுதுளை இங்கு மட்டுமே கிடைத்துள்ளன. அம்புமுனைப் போன்ற அமைப்பு இங்குதான் முதல்முறை கிடைத்துள்ளன.(கொடுமணல் அகழாய்வு, த.நா.அ.தொ.து, (ப-17,18)
5. இப்பகுதி முதுமக்கள் தாழி என்று மக்களால் அழைக்கப்படுகிறது.
6. இப்பகுதி கூடாரம் என்று அழைக்கப்படுகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. சசிகலா.கோ, தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம், சிந்தன் புக்கஸ், சென்னை, 2019(முதற்பதிப்பு).
2. சிவசுப்பிரமணியன். ஆ, பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2021(முதற்பதிப்பு).
3. சுப்பிரமணியன்.தி, தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018(மூன்றாம் பதிப்பு).
4. தி.ஶ்ரீதர் (பதிப்பு), கொடுமணல் அகழாய்வு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை,2011
5. *Ramanna H.S, Megalithic of South India and South East Asia A comparative Study*
6. *RAO K.P, MEGALITHIC PORT-HOLE : A TECHNO-CULTURAL STUDY (Article)*



ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com